# பல்லேபொல பிரதேச சபை
# மாத்தளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூலை 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்லேபொல பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டில் 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 1,805,235 தொகைக்காக கடன்கொடுத்தோரின் கீழ் கணக்குகளில் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 470,000 பெறுமதியான 08 காணித் துண்டுகளின் பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டுப் பெறுமதி ரூபா 1,442,310 தொகையான கப் வாகனத்தின் கெபின் ஒன்று பின்பக்க தட்டு மற்றும் 15 மேசைகளின் பெறுமதி என்பன மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கு வைக்கப்படாமல் மீண்டெழும் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 391 | 316 | 368 |
| (ii) | வாடகை | 561 | 413 | 164 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 652 | 666 | 50 |
| (iv) | ஏனைய வருமானம் | 17,378 | 18,364 | 4,772 |

**2.3.2 ஆதன வரியும், ஏக்கர் வரியும்**

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி முறையே ரூபா 267,372 தொகை மற்றும் ரூபா 101,104 தொகைகள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபையினால் வழங்கப்படுகின்ற வசதிகளை அதிகரித்திக்கொள்ளும் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வெளியிடப்பட்ட எல்லையினை விரிவாக்கி ஆதனவரியை அறவீடு செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக 2009 யூன் 17 ஆந் திகதி அனுப்பப்பட்டிருந்த போதிலும் அதன் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இறுதித் தடவையாக ஆதனவரி திருத்தம் செய்யப்பட்ட 2004 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் 09 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மீள ஆதன வரித்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

வசதிகள் பெறப்பட்டிருந்த போதிலும் அந்தப் பிரயாணங்கள் கடமைகளுக்கான பிரயாணங்களாக இருந்தமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய கோரல் கடிதம் மற்றும் வரவுச் சான்றிதழ் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2002 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் மீதிகள் முறையே ரூபா 1,004,051 தொகை மற்றும் ரூபா 569,558 தொகைகளைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்குச் சொந்தமான பாலர் பாடசாலை மற்றும் மில்லவான நூலகக் கட்டிடம் 2011 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தும் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் நிலுவையாக இருந்த வாடகைகளின் கூட்டுத்தொகையான ரூபா 39,800 இனை அறவீடு செய்வதற்கோ அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கோ பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள எஹெலேபொல வத்த என்ற பெயரில் உள்ள தனியார் காணியொன்றில் அகற்றப்பட்டு மண்போடப்பட்டு மூடப்பட்டிருந்தமை அதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் குப்பைகளை அகற்றுவதற்காக முறையான திட்டமொன்று கடைப்பிடிக்கப்படாதிருந்தமையும், கழிவுப்பொருட்களை மீள்சுழற்சி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக கவனம் செலுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.